## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2017

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பல்கலைக்கழகத்தின் மஹாபொல மற்றும் மாணவர்களிற்கான நிதி உதவிகள் தொடர்பான வருமானம் மற்றும் செலவினம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நூலகப் புத்தகங்கள் மற்றும் மேலங்கிகள் மீதான பெறுமானத்தேய்வு முறையே ரூபா 8,147,981 மற்றும் ரூபா 53,128 தொகைகளால் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை கவனத்தில் கொள்ளாமல் ஆண்டின் ஆரம்ப மீதிக்கு பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததனால் ரூபா 1,038,296 தொகை கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,491,474 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

அகற்றப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்குரிய கிரயம் கணக்குக் குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 10,083,717 மீதியாக காணப்பட்ட போதிலும் அதற்குரிய விரிவான பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 10,148,112 மீதியாக காணப்பட்டதனால் ரூபா 64,395 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிணைமுறிகளை மீறியிருந்த விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பெறவேண்டிய ரூபா 105,027,745 கூட்டுமொத்தமான பிணைமுறி மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிணைமுறிகள் மீறப்பட்டிருந்த ஆண்டுகளின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும் போது ஆண்டின் இறுதியலுள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 105,027,679 கூட்டுமொத்தமான மீதியில் 34 சதவீதத்திற்குச் சமமான ரூபா 36,100,691 தொகை 5 ஆண்டுகளிற்கு குறைவாகவும் 63 சதவீதத்திற்குச் சமமான ரூபா 66,390,959 தொகை 10 ஆண்டுகளிற்கு மேலாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 12 சதவீதத்திற்குச் சமமான ரூபா 12,795,674 கூட்டுமொத்த தொகை 20 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்ட அதே நேரம் 02 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,536,029 பெறுமதியான பிணைமுறி மீறப்பட்டிருந்த ஆண்டு தற்போதும் இனங்காணப்பட்டிருக்காதமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) அறவிடப்பட வேண்டிய பிணைமுறிகள் தொடர்பாக கணக்குப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் தயாரிக்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வை ஒப்பிடும் போது 24 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12,650,028 தொகை உரிய வயதுப் பகுப்பாய்வில் உள்ளடக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக உள்ள முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 79,109,414 தொகையான அறவிடப்பட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 360,571 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. 06 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணைமுறிப் பெறுமதி ரூபா 522,817 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை மற்றும் இன்னொரு விரிவுரையாளரின் மீதி ரூபா 883,387 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை என்பன காரணங்களாக மேற்படி வேறுபாட்டிற்கு பங்களித்திருந்தன.

(iv) 2016 ஆம் ஆண்டில் பிணைமுறிகளை மீறியிருந்த 5 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 22,749,902 தொகையுடன் சேர்த்து 2011 ஆம் ஆண்டில் பிணைமுறிகளை மீறியிருந்த விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 478,400 தொகை என்பன பிணைமுறி மீறல்கள் இடம்பெற்றிருந்த ஆண்டுகளில் இனங்காணப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்தன. ஆகையால் ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய அறவிடப்பட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதிகள் சரியாக இனங்காணப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(v) விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணைமுறிப் பெறுமதி ரூபா 220,861 தொகையென நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. குறிப்பிட்ட தொகை முழுமையாக அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 167,630 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியுள்ளதாக காட்டப்பட்டிருந்தது.

(vi) 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பிணைமுறிகளை மீறியிருந்த 2 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,875,229 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(vii) பிணைமுறிகளின் அறவிடப்பட வேண்டிய பெறுமதியை சரியாகக் கணிப்பீடு செய்யத் தவறியதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் 07 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 403,578 தொகை மேலதிகமாக அறவீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சேவையை விட்டுச் சென்று 05 ஆண்டுகளிற்கு மேலான காலப்பகுதி கடந்திருந்த போதிலும் அவ்வாறு சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் 08 ஊழியர்களிடமிருந்து ரூபா 475,667 கூட்டுமொத்தமான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இரண்டு ஊழியர்களிற்குரிய கடன் மீதி 19 ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ந்து காணப்பட்டது. அவ் ஊழியர்களில் 03 ஊழியர்களிற்குரிய ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை என 2017 யூலை 13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) கேள்வி வைப்புக்களாக பல்வேறு நபர்கள் மற்றும் பிரிவுகளிலிருந்து 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டிருந்த ரூபா 749,490 கூட்டுமொத்தத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1985 இன் 07 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 44(1)(V) ஆம் பிரிவு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்கு 21 உறுப்பினர்களை நியமனம் செய்திருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்ட பிரிவின் பிரகாரம் நிர்வாகத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தி பொது நிர்வாக அமைச்சின் பிரதிநிதி மற்றும் திறைசேரியின் பிரதிநிதி ஆகியோரை நியமனம் செய்வதற்கு சாத்தியமாக இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | |
| (i) 3.7 மற்றும் 3.8 ஆம் பந்தி | ஊழியர்களின் கடன் தவணைப் பணங்களின் அறவீடானது கடன் வழங்கப்பட்ட மாதத்தை தொடர்ந்து வரும் மாதத்திலிருந்து உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 29 சந்தர்ப்பங்களில் அவ்வாறு குறித்துரைத்த காலப்பகுதியில் தொடர்ச்சியாக அறவிடப்பட்டிருக்காத கடன் தவணைப் பணங்களின் பெறுமதி ரூபா 625,860 கூட்டுமொத்தம் ஆகும். |

| | |
|---|---|
| (ii) 3.18 ஆம் பந்தி | கடன் தொகைகளை அறவீடு செய்வதற்கு அல்லது அறவீடு செய்வதற்காக திருப்திகரமான வழிமுறைகளில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத ரூபா 590,590 இடர் கடன் மீதிக்கு உரித்துடைய 06 உத்தியோகத்தர்களிற்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

----------------------------------------------------------

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 454(1) | அரசாங்க ஆதனங்கள் மற்றும் களஞ்சியங்களில் ஒவ்வொரு பொருளையும் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வழங்குதல் என்பன பொருளிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 6 மின் பிறப்பாக்கிகள் பொருளிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமித்த முற்பணங்களின் ரூபா 100,000 தொகையான ஆகக் கூடிய எல்லையை விஞ்சி 25 சந்தர்ப்பங்களில் ரூபா 3,448,097 கூட்டுமொத்தமான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை

-----------------------------------------------------

| | |
|---|---|
| (i) XXVI ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் என்பன குறித்த பணிக்காக நியமனம் செய்யப்படுகின்ற பொருள் மெய்மையாய்வுச் சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல்கலைக்கழக நூலகப் புத்தகங்கள் தொடர்பில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் உள்வருகை, வெளிச்செல்லல் மற்றும் விடுமுறை என்பவற்றை சரிபார்ப்பதற்காக முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டுமென பொது முயற்சிகள் குழுவின் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் உபப்பாகங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவை | |
| | (i) 1.4.3 ஆம் பிரிவு | மின் பிறப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போது வேலைப் பெறியியலாளர் தொடர்புகளிற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2.8.1 (ஆ) மற்றும் 7.3.1 (ஆ) பிரிவுகள் | மீளாய்வாண்டில் மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு விடயத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒருவராக மின் பொறியியலாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒப்பந்த மதியுரையாளரின் இயலளவில் செயற்பட்டிருந்த பல்கலைக்கழகத்தின் வேலைப் பொறியியலாளர் அதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்தார். |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 224,091,778 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 156,499,651 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 67,592,127 வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அரசாங்க மீண்டெழும் மானியம் ரூபா 370,048,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 297,649,467 ஆல் அதிகரித்தமை, ஒப்பந்தச் சேவைகள் தொடர்பான செலவினம் ரூபா 145,858,803 ஆல் அதிகரித்தமை, நிலையான சொத்துக்கள் புனரமைப்பு செலவினம் மற்றும் ஆராய்ச்சி செலவினம் என்பன ரூபா 86,880,237 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 70,832,816 ஆல் அதிகரித்தமை என்பன மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் ரூபா 341,172 தொகையான பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 145,069,392 மிகையொன்றாக அதிகரித்திருந்ததை வெளிப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் போது மீண்டும் ரூபா 17,883,619 பற்றாக்குறையொன்றாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் ஆரம்பித்திருந்த வீழ்ச்சி தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டளவில் அவ் வீழ்ச்சி ரூபா 224,091,778 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,508,188,994 நேர்மறைப் பெறுமதியாகக் காணப்பட்ட பங்களிப்பு மீளாய்வாண்டளவில் ரூபா 2,727,244,746 தொகை வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பணிக்கொடை தொடர்பான செலவினம் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் ஊழியர் ஊதியம் 13.45 சதவீதத்தால் ஆன அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 2,475.08 மில்லியன் தொகையாக உள்ளது. ரூபா 3,162.16 மில்லியன் தொகையான மொத்த அரசாங்க மீண்டெழும் மானியத்தில் 78.27 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,475.08 மில்லியன் தொகை ஊழியர் ஊதியம் மீது செலவிடப்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்த அரசாங்க மீண்டெழும் மானியத்தின் 21.73 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 687.07 மில்லியன் தொகை மாத்திரம் அனைத்து ஏனைய செலவினங்கள் மீது செலவிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 2016 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் பதவியணியினரின் ஒவ்வெரு பதவிகளுக்கும் உரிய சம்பளங்களிலுள்ள வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படாமல் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போது ஊழியரொருவருக்கான வருடாந்தக் கிரயம் ரூபா 1,227,718 தொகையாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்டரீதியான வழக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரொருவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் அவரால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பிரதி நிதியாளரொருவர் இரண்டாம் தடவை அவரது சேவையை பல்கலைக்கழகம் நீடிப்புச் செய்து வழங்கத் தவறியமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்திருந்தார்.

(இ) முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றின் ஊடாக சேவை முடிவுறுத்தப்பட்டிருந்த தரம் III எழுதுநரொருவர் மீள சேவையில் அமர்த்துவதற்கு தொழில் நியாய சபையால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பிற்கெதிராக பல்கலைக்கழகத்தால் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பிணைமுறிகள் மீறப்பட்டமைக்காக பெறப்பட வேண்டிய ரூபா 5,103,826 தொகையினை அறவீடு செய்வதற்காக பல்கலைக்கழகத்தினால் முன்னாள் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(உ) பிணைமுறிகள் மீறப்பட்டமைக்காக பெறப்பட வேண்டிய ரூபா 10,762,632 தொகையை அறவிடுவதற்காக தகுதிகாண் விரிவுரையாளரொருவரிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் பல்கலைக்கழகத்தால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பல்கலைக்கழகத்தின் இரண்டு கட்டிடங்களை திருத்தம் செய்தலை கைவிட்டிருந்த ஒப்பந்ததாரர் ஒருவரிடமிருந்து ரூபா 1,785,240 அறவீட்டிற்காக மாவட்ட நீதிமன்றத்தில் பல்கலைக்கழகத்தால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடம் தவிர்ந்த 4 பீடங்களில் கல்விகற்ற 12,054 மாணவர்களிற்காக மீண்டெழும் செவினமாக ரூபா 3,127,368,214 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 11,609 மாணவர்களிற்காக ரூபா 2,913,911,823 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது மாணவர் ஒருவருக்கான சராசரிக் கிரயம் ரூபா 259,447 தொகையாக காணப்பட்டமையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்திற்குச் சமமான ரூபா 8,442 இனால் ஆன அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது. குறிப்பிட்ட 04 பீடங்களினதும் மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 213,456,391 அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் மாணவர் ஒருவரிற்கான கிரயத்தில் ஏற்பட்ட 3 சதவீத அதிகரிப்புக்கு முன்னைய ஆண்டிற்கு எதிராக மீளாய்வாண்டின் மாணவர் எண்ணிக்கை 445 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக பங்களித்திருந்தது.

(ii) புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப பீடத்தின் 642 மாணவர்கள் மற்றும் பொறியியல் பீடத்தின் 240 மாணவர்கள் தொடர்பாக மீண்டெழும் செலவினமாக மீளாய்வாண்டில் முறையே ரூபா 164,843,281 மற்றும் ரூபா 118,019,455 தொகைகள் ஏற்பட்டிருந்தன. இதனால் மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப பீடத்தின் மாணவர் ஒருவரிற்கான கிரயம் ரூபா 256,765 தொகையாக இருந்ததுடன் பொறியியல் பீடத்தின் மாணவர் ஒருவரிற்கான கிரயம் ரூபா 491,748 தொகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017/2018 கல்வியாண்டிற்காக 3,497 எண்ணிக்கையான உள்ளக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் 06 பீடங்களிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் பௌதீக விஞ்ஞானப் பிரிவிற்கான 28 மாணவர்கள், உணவுத் தொழில்நுட்ப பிரிவிற்கான 02 மாணவர்கள், முகாமைத்துவப் பிரிவிற்கான 04 மாணவர்கள், வணிகப் பிரிவிற்கான 02 மாணவர்கள், பொது முகாமைத்துவப் பிரிவிற்கான 02 மாணவர்கள், தாதியப் பிரிவிற்கான 06 மாணவர்கள் மற்றும் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவிற்கான ஒரு மாணவர் ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 நவம்பர் 17 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 15/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற உள்ளக மாணவர்களிற்கான முதலாவது பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள் தொடர்பான பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திகதியிலிருந்து 03 மாத காலப்பகுதியினுள் வெளியிடப்பட வேண்டும். கணக்காய்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த 06 பீடங்களில் 04 பீடங்களால் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டில் முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தின் முதலாவது அரையாண்டு இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகள் 16 – 28 நாட்கள் தாமதத்தின் பின்னர் வெளியிடப்பட்டிருந்தன.-

(ii) 2017 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டிற்காக மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் இறுதிப் பரீட்சை 2017 ஆகஸ்ட் 19 இல் முடிவடைந்திருந்ததுடன் அதன் பெறுபேறுகள் 54 – 102 நாட்கள் தாமதத்தின் பின்னர் வெளியிடப்பட்டிருந்தன. மேலும் 2017 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டு இறுதிப் பரீட்சை 2018 பெப்ரவரி 17 இல் முடிவடைந்திருந்த போதிலும் பெறுபேறுகளை வெளியிடுவதில் 27 – 42 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது.

(iii) 2017 ஆம் ஆண்டிற்கான பொறியியல் பீடத்தின் முதலாவது அரையாண்டு இறுதிப் பரீட்சை 2017 மே 21 இல் முடிவடைந்திருந்ததுடன் அதன் பெறுபேறுகள் 2017 செப்தெம்பர் 28 இல் வெளியிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க முதலாம் ஆண்டு மாணவர்கள் மாத்திரம் பரீட்சைகளிற்குத் தோற்றியிருந்த அவ் பீடத்திற்கான பெறுபேறுகளை வெளியிடுவதில் 40 நாட்கள் தாமதமாகியிருந்தது.

(iv) பிரயோக விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு பரீட்சைகளின் பெறுபேறுகளை வழங்குவதில் நீடித்த தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டுகளின் இரண்டாவது அரையாண்டு இறுதிப் பரீட்சைகள் 2017 ஒக்தோபர் 28 இல் நடைபெற்றிருந்ததுடன் பெறுபேறுகளை வழங்குவதற்கு முன்னர் 116 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகளிற்குரிய பெறுபேறுகளை வழங்குவது தொடர்பான தகவல் முறைமையொன்று காணப்படாததன் காரணமாக பெறுபேறுகளை வழங்குகின்ற திகதிகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களின் பெறுபேறுகள் பீடத்தின் சபையின் அங்கீகாரமின்றி உரிய விரிவுரையாளர்களால் கற்றல் முகாமைத்துவ முறைமைக்கு நேரடியாக தரவேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கல்விசார் பதவியணியினரின் வருகைகள், வெளிச்செல்லல்கள் மற்றும் விடுமுறைகளை சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், இதுவரையிலும் அவ்வாறானதோர் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காததால் கல்விசார் பதவியணியினருக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,931,193,768 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் படிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் கடமைகளிற்காக வருகைதரும் மற்றும் வெளியேறிச் செல்லும் நேரங்களினை பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற எந்தவொரு முறையும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விரிவுரையாளர்கள் உரிய பிரகாரம் விரிவுரைகளில் பங்குபற்றுகின்றமையால் அவ்வாறான தேவைப்பாடொன்று ஏற்படவில்லை என்பதாக கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விரிவுரையாளர்கள் விரிவுரைகளிற்காக வருகை தருகின்றமை சம்பந்தமாக சில கல்விப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அது தொடர்பில் திருப்திகரமான கட்டுப்பாட்டு முறையொன்று காணப்படவில்லை என்பது பின்வரும் விடயங்களிலிருந்து அவதானிக்கப்பட்டது.

(i) சிங்கள மற்றும் வெகுஜன தொடர்பாடல் பிரிவில் 2017 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டின் செயலாற்றலை பரீட்சித்த போது பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட நேர அட்டவணையில் பட்டியலிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விடக் குறைவான விரிவுரைகளே நடாத்தப்பட்டிருந்தன என மாணவர்களின் கையொப்ப பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது, அதற்கிணங்க நேர அட்டவணையிலுள்ள 19 பாடங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட விரிவுரை மணித்தியால எண்ணிக்கையை விட 164 மணித்தியாலங்கள் குறைவாக விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் விதிமுறைகளிற்கு இணங்க ஒவ்வொரு விரிவுரையாளராலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆகக் குறைந்த விரிவுரை மணித்தியால எண்ணிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்காத 11 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஒப்படைகளை சமர்ப்பித்தல் மற்றும் கல்வித் துறை சுற்றுலாக்கள் போன்ற கல்வி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுகின்ற மாணவாகள் தொடர்பான வருகைப் பதிவேடுகள் பேணப்பட வேண்டுமென பிரிவுத் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருகைகளிற்காக அத்தகைய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரிவின் 14 நிரந்தர விரிவுரையாளர்கள் மற்றும் 05 வருகை விரிவுரையாளர்கள் விரிவுரைகளிற்காக வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ் விரிவுரையாளர்கள் அரையாண்டுகளின் போது ஒவ்வொரு பாடத்திற்காகவும் 15 மணித்தியாலங்கள் படி 37 பாடநெறிகள் தொடர்பாக 555 மணித்தியாலங்கள் பாடக்குறிப்பு வகுப்புக்களை (tutorial classes) நடாத்தியிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான எந்தவொரு சான்றும் காணப்படவில்லை.

(iv) 2014/2015 கல்வியாண்டின் முதலாவது அரையாண்டிற்குரிய பாலி மற்றும் பௌத்தக் கற்கைகள் பிரிவின் செயலாற்றல் மீதான பரீட்சிப்பானது நேர அட்டவணைகளிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தமையை வெளிப்படுத்தியிருந்தது. 51 பாடநெறிகள் தொடர்பாக 202 விரிவுரை மணித்தியாலங்கள் அவ்வாறு விடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) மாணவர்களின் கையொப்ப தாள்கள் விரிவுரையாளர் அல்லது மேற்பார்வையாளரின் பெயர், திகதி மற்றும் நேரத்தை கொண்டிருக்காததால் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்று தொடர்பாகவும் விரிவுரைக் காலப்பகுதியை மதிப்பிட முடியாதிருந்ததுடன் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததை சரிபார்ப்பதற்கான சான்றாக அத் தாள்களை பயன்படுத்த முடியாதிருந்தது.

(உ) பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் மூலம் அப் பல்கலைக்கழகத்தின் தரத்தினை உயர்த்த முடிவதுடன் தேசிய பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பினை வழங்க முடிகின்றது. ஆகையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்களிற்கு ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பாரியளவு நிதி ஏற்பாட்டுத் தொகை வருடந்தம் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் மீளாய்வாண்டில் 84 விரிவுரையாளர்களிற்கு ஆராய்ச்சி மானியமாக ரூபா 164.85 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னைய ஆண்டின் இறுதி வரை 227 விரிவுரையாளர்களிற்காக ரூபா 255.61 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2012 ஆம் ஆண்டில் 24 விரிவுரையாளர்களாலும் 2013 ஆம் ஆண்டில் 15 விரிவுரையாளாகளாலும் 2014 ஆம் ஆண்டில் 08 விரிவுரையாளர்களாலும் 2015 ஆம் ஆண்டில் 37 விரிவுரையாளர்களாலும் 2016 ஆம் ஆண்டில் 54 விரிவுரையாளர்களாலும்

என்றவாறு 138 விரிவுரையாளர்களால் உரிய ஆராய்ச்சிகள் கைவிடப்பட்டிருந்ததுடன் அவ் விரிவுரையாளர்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பளங்கள் மற்றும் படிகளின் பிழையான கணிப்பீடு, கணனிகள் தொடர்பாக இரகசியக் குறியீடுகளை பயன்படுத்துவதில் முறைகேடுகள், வரி மற்றும் கடன் தவணைப் பணங்களை அனுப்புவதிலுள்ள தவறுகள், இரட்டிப்பு கணிப்பீட்டு தவறுகள், உள்ளீடு மற்றும் வெளியீடு தொடர்பான உள்ளக மேற்பார்வை காணப்படாதமை மற்றும் பல்வேறு நிலைகளிலிருந்தான தொழிற்பாடுகளில் குறுக்கீடுகளிற்கான சாத்தியத்தன்மை போன்ற காரணங்களினால் உள்ளீட்டுத் தரவு பாதுகாப்பற்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட அரை தன்னியக்க மென்பொருளானது சமமான இயலளவுடைய நிறுவனங்களால் பயன்படுத்தப்படாத ஒன்றாகவுள்ளமை உள்ளடங்கலாக 11 குறைபாடுகள் காரணமாக சம்பளங்களை தயாரிப்பதற்காக பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்பட்ட கணனி மென்பொருள் நம்பிக்கைக்குரியதாக இருக்கவில்லை என்பது முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க சுதந்திரமான தரப்பினர் ஊடாக முறைமைக் கணக்காய்வொன்றை மேற்கொண்டு 06 மாத காலப்பகுதியினுள் மென்பொருளின் குறைபாடுகளை சரிசெய்வதற்கும் புதிய கணனி முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 10 ஆம் திகதி இடம்பெற்ற 466 ஆவது ஆளுகைச் சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் உரிய நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடம், மருத்துவ பீடம், சுமங்கல கட்டிடம் மற்றும் விமலா டி சில்வா விடுதி என்பவற்றில் நிறுவப்பட்ட பழையதாக இருந்தாலும் பயன்பாட்டிலுள்ள 04 மின்பிறப்பாக்கிகளின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வனம் மற்றும் சுற்றாடல் விஞ்ஞான கல்விப் பிரிவுடன் இணைந்த நிலைத்துநிற்கவல்ல நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான அரசியலமைப்பின் பிரகாரம் அவற்றின் 25 சதவீத நிதியானது ஆளணி வேதனங்கள் தொடர்பாக பயன்படுத்தப்பட முடிந்திருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் 03 தற்காலிக போதனாசிரியர்கள் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், செயலாளர் மற்றும் செயற்திட்ட உதவியாளர் ஆகிய 03 பதவிப் பெயர்களில் முழு நேரம் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் படிகள் உரிய செயற்திட்டத்தின் வருமானத்திலிருந்து செலுத்துவதற்குப் பதிலாக பல்கலைக்கழகத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 செப்தெம்பர் 10 வரை பல்கலைக்கழகத்திலிருந்து அவற்றின் மீது ஏறத்தாழ ரூபா 05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

மின்பிறப்பாக்கிகளிற்கு பயன்படுத்துவதற்கு 11,260 லீற்றர் டீசலை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது பொதுக் கட்டுப்பாட்டு பிரிவினால் எரிபொருளிற்கான கட்டளைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து 6,060 லீற்றர்கள் தொடர்பான 08 எரிபொருள் கட்டளைகள் பராமரிப்புப் பிரிவின் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் வேலை அதிதியட்சகரின் வேலை நிறைவேற்றல் பதிவேட்டிற்கிணங்க மின்பிறப்பாக்கிகளிற்கு 9,970 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்திற்கு எரிபொருள் இருப்புக்களை கொண்டுவருதல், மின்பிறப்பாக்கிகளிற்கு எரிபொருள் நிரப்புதல் மற்றும் மீதி இருப்புக்களை

பேணுதல் என்பவற்றில் வேலை அத்தியட்சகர் தாமாகவே ஈடுபட்டிருந்தமையும் புத்தகங்களில் வேலை அத்தியட்சகரால் வழங்கப்பட்ட தகவல்கள் களஞ்சியப் பொறுப்பாளரால் பதிவு செய்யப்பட்டிருந்தமையும் வேலை அத்தியட்சகரின் வேண்டுதலின் அடிப்படையில் எரிபொருள் கட்டளைகளை வழங்குதல் மற்றும் பற்றுச்சீட்டுக்களை பெறுதல் மாத்திரம் பொது நிர்வாக உதவிப் பதிவாளரால் மேற்கொண்டிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. ஆகையால் மின்பிறப்பாக்கிகளிற்கு எரிபொருள் வழங்குவது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் வினைத்திறனற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிதிகள்

எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் முறையாக மதிப்பீடு செய்யப்படாமல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததால் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள், அழகியல் திறன்களை முன்னேற்றுதல் மற்றும் பௌதீகவியல் கல்விப் பிரிவை மாற்றியமைத்தல் என்பவற்றிற்காக திறைசேரி மானியங்களிலிருந்து பெறப்பட்ட முறையே ரூபா 2,628,076, ரூபா 1,570,849 மற்றும் ரூபா 1,249,500 தொகைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாது இருந்தன.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,307 ஆக இருந்ததுடன் அதில் கல்விசார் பதவியணியினரின் 205 பதவிகள், உதவிக் கல்விசார் பதவியணியினரின் 34 பதவிகள், நிர்வாகப் பதவியணியினரின் 02 பதவிகள், ஏனைய நிறைவேற்றுப் பதவியணியினரின் 09 பதவிகள் மற்றும் வைத்திய அதிகாரியின் 03 பதவிகள் என்பன வெற்றிடமாக இருந்தன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கல்விசாராப் பதவியணியினர் 1,066 ஆக இருந்ததுடன் அவற்றில் 916 பேர் நிரந்தர அடிப்படையிலும் 15 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 135 பதவிகள் வெற்றிடமாக இருந்தன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக போதியளவு அறிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரல் இன் பிரகாரம் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான இலக்கு கட்டங்கள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2018 மார்ச் 21 இல் என்னால் மாதிரியின் ஊடாக வேண்டப்பட்டிருந்த தகவல்கள் 2018 ஒக்தோபர் 15 வரையிலும் பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016/2017 ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலையை பேணுவதற்கு தேசிய போட்டிக் கேள்வியின் கீழ் 2016 ஆகஸ்ட் 28 இல் கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் 14 சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பாக 38 விலைமனுக்கள் பெறப்பட்டிருந்த அதே நேரம் ஸ்ரீ சோரத விடுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலைக்காக ஒரு விலைமனு பெறப்பட்டிருந்தது. அவ் விலைமனுதாரரும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு நிராகரித்தமையால் 2016 ஒக்தோபர் 11 இல் ஏனைய சிற்றுண்டிச்சாலைகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த 38 விலைமனுதாரர்களில் 5 விலைமனுதாரர்கள் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டு ஸ்ரீ சோரத விடுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலைக்காக மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட 5 விலைமனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படையொன்றில்லாமல் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) ரூபா 45,961,020 தொகை செலவிடுவதன் மூலம் 500 கேவிஏ இயலளவான 3 மின் பிறப்பாக்கிகளை வழங்கி நிறுவுதல் தொடர்பான ஆவணங்கள் மீதான பரீட்சிப்பின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 செப்தெம்பர் 24 இல் தேசிய புதினப் பத்திரிகை ஒன்றில் மாத்திரம் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு தேசிய போட்டிக் கேள்வியினூடாக உள்ளூர் முகவரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ii) வற் தவிர்ந்த ரூபா 45,961,020 பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 120 நாட்களினுள் 03 மின் பிறப்பாக்கிகளையும் வழங்கி நிறுவுதல் என்ற நிபந்தனையின் கீழ் 2016 திசெம்பர் 30 இல் வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்னர் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய வழங்குநரின் வேண்டுதலின் அடிப்படையில் 2017 யூலை 31 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 ஏப்ரல் 26 வரை நிறுவுதலை வழங்குநர் தாமதப்படுத்தியிருந்தார்.

(iii) பெறுகைக்குரிய தொழில்நுட்பக் குறிப்புரைகளை தயாரித்தல், சேவை நிபந்தனைகளை தீர்மானித்தல் மற்றும் நோக்கெல்லையை தீர்மானித்தல் என்பன வேலைப் பொறியியலாளராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. உள்ளூர் முகவரிடமிருந்து மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்த போது வழங்குநரால் வழங்கப்படும் மின் பிறப்பாக்கிகளிற்குரிய உற்பத்தியாளரின் தொழிற்சாலையிலுள்ள மின் பிறப்பாக்கிகளின் பொருத்தத் தன்மையை பரீட்சிப்பதற்கு பொறியியலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அதன் மீதான செலவினம் வழங்குநரால் பொறுப்பேற்கப்பட வேண்டும் எனவும் தொழில்நுட்பக் குறிப்புரைகள் மற்றும் இணங்கிய பதிவேடுகளின் கீழ் வேலை நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுப் பெறுமதியிலான அதிகரிப்பு அந் நிபந்தனைக்கான காரணமாக அவதானிக்கப்பட முடிந்திருந்தது. குறிப்பிட்ட வழங்குநர் நாடளாவிய ரீதியில் பல நிறுவனங்களிற்கு மின் பிறப்பாக்கிகளை வழங்கியிருந்தார். மின் பொறியியலாளரால் பரீட்சிக்கப்பட வேண்டிய ஒன்று அல்லது சில மின்பிறப்பாக்கிகளிற்கான சாத்தியத்தன்மை

காணப்பட்ட போதிலும் உரிய பரீட்சிப்பு தொடர்பாக 06 நாட்கள் இத்தாலிக்கான வெளிநாட்டு சுற்றுலாவில் வேலைப் பொறியியலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் பங்குபற்றியிருந்தனர். அவ் 02 உத்தியோகத்தர்களிற்கும் இணைந்த படி மற்றும் வெப்ப உடைகளிற்கான படிகளாக பல்கலைக்கழகத்தால் ரூபா 102,185 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) வற் இன்றி ரூபா 2,810,000 பெறுமதியில் 50 கேவிஏ மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்வதற்கான பெறுகை செயன்முறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஏப்ரல் 26 இல் பெறுகை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட கடிதங்கள் ஊடாக ஒப்பந்ததாரர்களிற்கு அறிவிக்கப்பட்டு சந்தை விலை முறையின் கீழ் வழங்குநர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

(ii) தொழில்நுட்பக் குறிப்புரைகளிற்கு இணங்க மின்பிறப்பாக்கிக்காக புகைப் பரிசோதனை சான்றிதழ் வேண்டப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரர் அச் சான்றிதழை சமர்ப்பித்திருக்கவில்லை.

(iii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கேள்வி திறத்தல் குழு என்பவற்றிற்கான நியமனக் கடிதங்கள் முறையாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 20 பெண் விடுதிகள் மற்றும் 18 ஆண் விடுதிகளிற்காக 54 பராமரிப்பாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பெறுகைச் செயன்முறையை பின்பற்றும் போது 2017 யூலை மாதத்தில் ஆகக் குறைந்த விலைமனுதாரரிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் விடுதிகளிற்கு முறையாக ஊழியர்களை வேலையிலீடுபடுத்துவதற்கு அக் கம்பனி தவறியதன் காரணமாக 2017 நவம்பரிலிருந்து அதன் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 இன் 3 ஆம் இலக்க பணியாளர்களின் தேசிய ஆகக்குறைந்த வேதனங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 2016 இன் 04 ஆம் இலக்க மற்றும் 2005 இன் 36 ஆம் இலக்க பணியாளர்களின் பாதீட்டு நிவாரணப் படி அதிகாரச்சட்டம் என்பவற்றின் பிரகாரம் கைத்தொழிலொன்றில் அல்லது சேவையொன்றில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அனைவரிற்கும் ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் ரூபா 13,500 ஆக காணப்பட வேண்டியதுடன் அவர்களின் ஆகக் குறைந்த நாளாந்த வேதனம் ரூபா 540 ஆக காணப்பட வேண்டும். அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் நாளாந்த வேதனம் ரூபா 472 ஆக விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர் ஆகக் குறைந்த விலை தீர்மானிக்கப்பட்டு பெறுகை அறிவித்தலில் ஆகக்குறைந்த விலையை பிரசுரிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கேள்விகள் கோரப்பட்டிருந்தன. ஆகையால் ஊழியர்களிற்கான ஆகக் குறைந்த வேதனத்தை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் தள்ளப்பட்டிருந்தனர். அரசாங்க கொள்கைகளின் பிரகாரம் ஆகக் குறைந்த வேதனக் கொடுப்பனவு மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு பங்களிப்புக்களை செலுத்துதல் தொடர்பான நிபந்தனைகளை தீர்மானிக்கத் தவறியமை காரணமாக ஊழியர்களின் மனக்குறைகள் மற்றும் தொழிலாளர் சட்டங்கள் தொடர்பாக பல்கலைக்கழகம் தேவையற்று பொறுப்புக் கூறவேண்டியிருந்தது.

(iii) முன்னைய ஆண்டில் குறிப்பிட்ட சேவையை வழங்கியிருந்த நிறுவனத்திற்கான உடன்படிக்கைக் காலப்பகுதி 2016 திசெம்பர் 15 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்ததால் 2016 ஒக்தோபர் 12 இல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்ததன் மூலம் பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய நிறுவனமொன்றை தெரிவு செய்தல் 2017 யூலை 16 வரை தாமதமாகியிருந்தது. பெறுகையை முறையாக திட்டமிட்டு நிறைவேற்றுவதிலுள்ள முகாமைத்துவக் குறைபாடு காரணமாக 09 மாத காலப்பகுதி முழுவதும் பெறுகை செயன்முறை இடம்பெற்றிருந்தது. பெறுகை செயன்முறைக் காலப்பகுதியின் போது அப்போது வரை பல்கலைக்கழகத்திற்காக சேவையை வழங்கியிருந்த நிறுவனம் செயற்பாட்டில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததால் ஒப்பந்த உடன்படிக்கைக்கு புறம்பாக 2017 யூலை 15 வரை ரூபா 10,232,973 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பெறுகைச் செயன்முறையை முறையாக நிறைவேற்றத் தவறியதன் காரணமாக 2017 ஆம் ஆண்டிற்காக விடுதிகளை பராமரிப்பது தொடர்பான சேவைகளிற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்துடனான உடன்படிக்கை 2017 நவம்பர் 12 இலிருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் அரைவாசியில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் மாதத்திலிருந்து முன்னைய ஊழியர்களைப் பயன்படுத்தி அச் சேவையை பல்கலைக்கழகம் பெற்றிருந்தது. இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,073,150 தொகையையும் 2018 மே மாதம் வரை ரூபா 4,116,812 தொகையையும் பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 102 ஆம் பிரிவிற்கு முரணாக நிதிக் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அப் பெறுமதிகளிற்கு ஒத்த தொகைகளினால் பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் போது 8 சந்தர்ப்பங்களில் அவ்வப்போது பாதீடு திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

## 6.3 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ பீடத்திற்காக மெத் செவன காணியிலிருந்து 5 ஏக்கர் விஸ்தீரணமுடைய நிலத்தினை கையேற்பதற்காக 1994 யூன் 29 ஆம் திகதி எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 1998 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் ரூபா 24 மில்லியன் தொகையும், மீளாய்வாண்டில் ரூபா 50 மில்லியன் தொகையுமாக ரூபா 74 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை மேல் மாகாண சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த காணியினை கையேற்கும் நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 61.5 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொஹுவலவில் அமைந்துள்ள காணியும் கட்டிடமும் பல்கலைக்கழகத் தேவைப்பாட்டிற்குப் பொருத்தமற்றிருந்ததால் களனி பல்கலைக்கழகத்தின் அரங்கேற்றக் கலைகள் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இந்த கையளிப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்தப்படாத சொத்தொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 70 மில்லியன் கிரயமுடைய பல்கலைக்கழகத்தின் கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்திற்காக 2003 ஆகஸ்ட் 6 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான நிர்மாணங்களை திட்டமிடுவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 2,336,090 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாமை தொடர்பில் 2011 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த செயற்திட்டத்தினை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதிலளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைபெற்றுவரும் வேலைகளின் கீழ் அந்த மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1990 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முற்பணமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,310,000 தொகை மஹரகம நகர சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ் முற்பணத்தை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பணிகளிற்காக சம்பள மீள்நிரப்புதல் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த பெண் விரிவுரையாளர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 1,437,882 கல்விப் படிகளை குறித்த நிறுவனத்தினால் மீள்நிரப்புவதற்கு முடியாதிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தமையால் குறித்த தொகை அந்த விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆய்வுகூட கட்டிடம் மற்றும் புதிய கலைக்கூடம் தொடர்பான திருத்தங்கள் ஒப்பந்ததாரரால் அரைவாசியில் கைவிடப்பட்டிருந்ததால் 2012 ஏப்ரல் 25 இல் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 2,268,483 முற்பணத்திலிருந்து நிறைவேற்றப்படாத வேலைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,764,013 தொகை செயலாற்றல் பிணைமுறியிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்ததாரரிடமிருந்து அத் தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபடிகல் விடுமுறையிலுள்ள (sabbatical leave) பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களின் உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியினை கழிப்பதற்கு உரிய வரி அட்டவணை பின்பற்றப்படாததன் காரணமாக 03 உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 318,850 ஆல் வரிகள் குறைத்து அறவீடு செய்யப்பட்டிருந்தன.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) உரிய தரத்திலமைந்த தன்னியக்க கணனி முறைமையின் தேவையினை சுட்டிக்காட்டத் தவறியமை.<br>(ii) அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை உடனடியாக அறவீடு செய்வதற்கு போதுமானளவு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்புக்களை முறையாக மேற்கொள்ளத் தவறியமை. |
| (ஈ) | சுய நிதியிடல் கற்கைநெறிகளின் முகாமைத்துவம் | மேலதிக நிதிகளை முறையாக பயன்படுத்த தவறியமை மற்றும் கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்படுதல். |
| (உ) | ஆராய்ச்சி உதவிகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடு | ஆராய்ச்சி உதவிகளின் பயன்பாடுகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமை மற்றும் செயன்முன்னேற்றத்தை மீளாய்வு செய்யத் தவறியமை. |
| (ஊ) | நிதிக் கட்டுப்பாடு | (i) பணப் பெறுவனவு தொடர்பாக வயதுப் பகுப்பாய்வை சரியாக இனங்காணத் தவறியமை.<br>(ii) காசுப் புத்தகத்தில் நிலுவையான மீதிகள் காணப்படுதல் |
| (எ) | பெறுகை செயன்முறை | பெறுகைத் திட்டத்திற்கமைய கொள்வனவுகளை மேற்கொள்ளத் தவறியமை மற்றும் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதில் குறைபாடுகள் காணப்படுதல். |